தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 2 | தி.பி. 2015 | ஆடவை 3 (17-6-84) | 65 காசுகள் | இதழ் எண்: 39 | பகுதி- 21-26

இந்தியாவில் மக்கள் உரிமை நசுக்கப்படுகின்றது என்பது மெய்யாகிறது!

பஞ்சாபியரின் போராட்டத்தில், நடுவண் அரசின் அணுகுமுறை கொடுமையானது!

செயவர்த்தனேவிற்கும், இந்திராகாந்திக்கும் வேறுபாடில்லை!

இந்துக்கள் அல்லாதவர் இந்தியாவில் ஆளுமை பெற, ஆரியத் தலைமை இடந்தருவதில்லை.

பிந்தரன்வாலே திட்டமிட்டுச்சுடப்பட்டதை, அரசு மறைக்கிறது!

பஞ்சாபியரை ஒடுக்குவதன்வழி, தேசியஇன எழுச்சிகளை அச்சுறுத்துகிறது!

புரட்சி மறவர்கள், போராட்டப்பாதையை மாற்ற வேண்டும்!

பாவலரேறுவின் தெளிவான அறிக்கை!

இந்திய அரசினர் அப்படி இப்படிப் போக்குக் காட்டி, இறுதியாக சீக்கியர்களின் பொற்கோவிலுக்குள் படைத் துறையினரைப் புகுந்து சுடும்படி செய்தேவிட்டனர். தில்லி சிம்மா மகுநிக்குள் இப்படியொரு நிலை ஏற்படுமானால் நிலைமை வேறாக இருந்திருக்கும். இனி காசி விசுவநாதர் கோயிலிலோ, காஞ்சிப் பெரியவான் மடத்திற்குள்ளேயோ, இந்தவகையில் பட்டாளம் உழைவதற்கு அரசு இவ்வாறு துணிவுகாட்டுமா என்பது வேறு. இந்துக்கள் அல்லாதவர் இந்தியாவில் ஆளுமை பெற, ஆரியத் தலைமை என்றுமே இடந்தருவதில்லை என்பதையே, பஞ்சாபியரின் போராட்டத்தை அடக்க மேற்கொள்ளப்படும் அரசின் கொடுமையான முயற்சிகள் மெய்ப்பிக்கின்றன. அத்துடன் இந்திய மண்ணில் மக்கள் உரிமை நசுக்கப்படுகின்றது என்பதற்கு, இதைவிடத் திட்டவட்டமான நடைமுறை எடுத்துக்காட்டு வேறொன்றும் இருக்க முடியாது.

சீக்கியரின் பொற்கோவிலுக்குள் இந்தியப் படை நுழைவதும், மக்களின் உரிமைப் போராட்டங்களை முறியடிப்பதும், இந்தியப் படையினரால் முடியாதவை என்று எவரும் கருதமுடியாது. இந்தியப்படை, இந்தியத் தேசிய இனங்களின் எழுச்சிகளை அடக்குவதற்கும் ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்படுமானால், அதனை மீறி இங்குள்ள எவரும் புரட்சி செய்துவிட முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், இந்த அளவில் படைத்துறை நேரடியாக நின்று போராடித் தேசிய உணர்வெழுச்சியை நசுக்குகின்ற உணர்வு இந்திராவுக்குத் தேவைதானா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருமணமான மகன், தனக்கொரு தனிக்குடித்தனம் வேண்டும் என்பதற்காக, அவனிடம் நேரடிப்போரில் தந்தை இறங்குவாரானால், அவனால் அவரை எதிர்த்து வெற்றி பெறமுடியுமா முடியாதா என்பதன்று கேள்வி. அப்படியொரு நேரடிப் போராட்டம் தேவைதானா என்பதைத் தந்தை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதே நம் கோரிக்கை. இந்தியாவுக்கோ இந்திராவுக்கோ இதனால் தனிப்பட்ட பெருமை கிடைத்து விட்டதாக அவர்களோ, அல்லது முதலாளிய வல்லாண்மைக் கோட்பாடுடைய இங்குள்ள கட்சித் தலைவர்கள் சிலரோ கருதுவார்களானால், அதைவிட இழிவு வேறொன்றும் இருக்க முடியாது மக்கள் உரிமையை நசுக்குகின்ற இந்த இட்லராட்சி முறையை எண்ணிப் பார்த்தால், இலங்கை செயவர்த்தனேவிற்கும். இந்தியாவின் இந்திராகாந்திக்கும் எந்த வகையான வேறுபாட்டையும் நம்மால் காணமுடியவில்லை. எப்படிப் பார்த்தாலும் பஞ்சாபியரின் போராட்டத்தில் நடுவண் அரசின் அணுகுமுறை மிக மிகக் கொடுமையானது

மேலும், பிந்தரன்வாலேவும் அவருடைய துணையாளர்களும் திட்டமிட்டுச் சுட்டுத் தள்ளப்பட்டிருப்பதை, அரசு, தற்கொலை என்னும் பெயரில் மூடி மறைக்கப் பார்க்கிறது. இவ்வாறு நேரடியான தலைமை அழிவுப்போரில்இயங்குவதற்கு, அரசு ஒரு தூண்டுகோலாக, அல்லது வழிகாட்டுதலாக இருப்பதை விரும்புமானால், இதே உத்தியை ஏதிரானர்கள் அல்லது வன்முறையாளர்கள் கடைப்பிடிப்பதை அரசு எவ்வாறு தடுத்துவிட முடியும். பஞ்சாபியரின் தலைமையை நேரிடையாக அழித்தொழிப்பதன் மூலம், பிற இந்திய தேசிய இன எழுச்சிகளை அச்சுறுத்தப் பார்க்கின்றது தில்லி அரசு! இது கொடுமையிலும் கொடுமை. விடுதலைப் போரில் நேரடியாக ஈடுபட்ட இந்தியத் தலைவர்களை எப்பொழுதுமே

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

இலங்கை வட்டமிசை மாநாடு

'இரும்பிடர்த் தலையார்'

ஈழத்தமிழர் சிக்கல் தீர்ப்பதற்காக இலங்கை 'அதிபர்' வட்டமிசை மாநாடு ஒன்று கூட்டியதும் அது பல மாதங்கள் தொடர்ந்து நடைபெறுவதும் நாம் அறிந்த ஒன்று.

ஈழத் தமிழருக்குத் தனித் தமிழ் நாடு—ஈழம்—என்ற முடிவே இறுதியானதும் உறுதியானதுமாக இருப்பினும், இடைக்காலத்திற்கு அவர்கள் ஏற்றுக் கொள்ளவிரும்புவது ஓர் எளிய தீர்வே. 'கொக்கொக்க கூம்பும் பருவத்து' என்ற தமிழ்மறை வாயுரைப்படி, ஏற்ற காலம் கனியும் வரையும் இடைக்காலத் தீர்வைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளலாம்.

மொழி உரிமையும் அரசியல் பணி உரிமையும் தங்களுக்கு இல்லை என்பதே தமிழரின் குறைபாடு. எனவே "சிங்களத்தைப் போலவே செந்தமிழும் சிறிலங்கையின் ஆட்சிமொழி. கல்விக் கூடங்கள், அரசியல், ஆட்சி, வேலைவாய்ப்பு, காவல், படைத் துறை போன்ற அனைத்து அமைப்புகளிலும் தமிழர்களுக்கு எண்ணிக்கை அடிப்படையில் (விழுக்காட்டுக் கணக்கில்) சிங்களவர்களுக்கு ஒத்த வாய்ப்பு அளிக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டால் அந்தக் குட்டித் தீவில் போராட்டங்களுக்கும் படுகொலைகளுக்கும் அழிவுக்கும் இடமே இருக்காது.

ஒரு மணித்துளியில் அறிவித்துவிடக்கூடிய இந்தத் தீர்வைச் சொல்ல முடியாததால்தான் வட்டமிசை மாநாடு மாதக்கணக்கில் நீள்கிறது.

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லத் தேற்றா தவர்... என்ற குறளுரை இங்கே மெய்யாகிறது.

இந்த நேர்மையான முடிவை அறிவிக்க முடியவில்லை என்றால் சிங்களவர்கள் தமிழர்க்கு உரிய உரிமைகளைக் கொடுக்கவிரும்பவில்லை, முன்வரவில்லை என்பதும் தமிழர்கள் தங்கள் உரிமைகளை விட்டுக் கொடுக்க அணியமாக இல்லை என்பதும் தெளிவாகின்றன.

சிங்களவர்கள் அகப்புற வல்லாண்மையைக் கருத்தில் கொண்டு 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்பது போலத் தங்கள் நிலையால் முரட்டுத்தனமான பிடிப்புறுதியுடன் இருப்பாராயின் 'வேட்டகத்தின் வாயிலேயே அமைதி அரும்பும்' என்ற கூற்று மெய்ப்பிக்கப்படும்.

கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி, தமிழர் சிக்கலை நேர்மையான முறையில் தீர்க்கவேண்டும் என்ற எண்ணம் சிங்களவர்க்குக் கொஞ்சம்கூட இல்லை என்பது உறுதியாகிறது. பல மாதங்கள் நடைபெறும் மாநாட்டின் கடைசிக் கூட்டம் சென்ற கிழமை நடந்தபோது ஒரு கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் நாடற்றவர்களாக வாழும் தமிழர்களுக்கு இலங்கைக் குடிஉரிமை வழங்கவேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது.

ஆனால் இதற்கு அஃது அளிக்கும் விளக்கம் நம் ஐயங்களை உறுதிப்படுத்துகிறது. இலங்கைச் சிக்கலில் இந்தியாவின் குறுக்கீட்டைத் தடுப்பதற்கே இவ்வுரிமை அளிக்கிறார்களாம்.

'இந்திய மக்கள்' என்ற உரிமை இருந்தால் அவர்கள் தாக்கப்படும்போது அவர்களைக் காப்பாற்ற இந்தியா தலையிட உரிமை உண்டு. அவர்கள் இலங்கை மக்கள் என்ற முத்திரையைக் குத்திவிட்டால் இந்தியா தலையிடமுடியாது. இப்படிப்பட்ட விளக்கம் அளிப்பதன் மூலம் இலங்கை வல்லாண்மை பிறர் தலையீடு இன்றித் தமிழர்களை அழிப்பதிலேயே கருத்தாக இருக்கிறது என்பது வெளியாகிறதே தவிர, சிக்கலைத் தீர்க்க அஃது உண்மையில் விரும்பவில்லை என்பதே மீண்டும் மெய்ப்பிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இலங்கை அமைச்சர் சிறில் மாத்தியூ இசுரேல், அமெரிக்கா உதவியுடன் சிங்களர் படைஒன்றை அமைத்திருப்பதாகவும் செய்தி வருகிறது.

இவற்றை எல்லாம் பார்க்கையில் வட்டமிசை மாநாடு என்பது செயவர்த்தனாவின் காலங்கடத்தும் தந்திரமே என்பது தெரிகிறது. உரிய நேரம் வரும் வரையும் மாநாடு-பேச்சு என்று காலங் கடத்திக் கொண்டு பின் தமிழர்களை அழித்து விடுவது என்பது அவர் முடிவு.

இதை நினைக்கையில் கடந்த கால வரலாறு நம் கண்முன் வருகிறது. இரண்டாம் உலகப் போரின் போது சப்பானியத் தூதுக்குழு ஒன்று அமெரிக்காவுக்குச் சென்று 'அந்நாட்டோடு போரிடுவதில்லை'' என்று அமைதிப்பேச்சு நடத்திக்கொண்டிருந்தது. பேச்சுரை பல மாதங்கள் நடைபெற்றது. அமெரிக்கா சற்றும் எதிர்பாராத வகையில் சப்பான் திடீரென்று 'அவாயி'ல் உள்ள முத்துத் துறைமுகத்தைத் தாக்கியது.

இதுபோன்று நடந்து விடாமல் விழிப்பாக இருக்குமாறு இந்திய அரசுக்கு உணர்த்துவது நம் கடமையாகிறது. ○

தமிழர் முன்னேறத் தடைகள்!

தமிழர், மாந்தருள் ஒருபகுதியினரே. இவர்களை அறிய அவர்களிடம் உள்ள தமிழும், தமிழினப் பண்பாடும் உதவுகின்றன. இவர்கள் முன்னேறத் தடைகள் உள்ளன! ஆம், மாந்த இனத்திற்குள்ள பொதுவான தடைகளோடு சிறப்பான தடைகளையும் நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்!

மக்களிடம், ஆளுமை செய்யும் ஆற்றல் பற்றிய அறிவு பெருகவில்லை. இயக்கங்கள் வல்லரசுகளின் வால்களும் தோல்களுமாகச் செயல்படுகின்றன. பல நாட்டுகளுக்கும் சந்தையிடமாகிப்போனது தமிழ்நாடு! இங்குள்ள பொதுமை இயக்கங்கள் வெறும் பொருளியல் போராட்டங்களிலேயே அழுந்திப்போய்விட்டன. மக்கள் அவற்றின் மீது சலிப்புக் கொண்டுவிட்டார்கள்! இந்நிலையில் தமிழர்க்குள்ள சிறப்பான தடைகளையும் காணுதல் வேண்டும்.

சாதி ஒருதடை! மதம் ஒருபோதை! நிலவுடைமை ஒரு சிக்கல். பல்குழுக்கள்; பாழ்செய்யும் உட்பகைகள் மொழிபற்றிய பிழைபட்ட பார்வை. தமிழ் மேல் கொண்ட போலியான ஆரவாரம். மெய், பொய் அறியாத கவர்ச்சி மயக்கங்கள். அரசியலில் மேலோட்டமான கண்ணோட்டம் இவையாவும் தமிழர் முன்னேறத் தடைகளாக உள்ளன.

— பறம்பை அறிவன்

உ.த.மு.க. ஒன்றுதான் சரியான வழிகாட்டுதல் உடையது!

ஆனால், மக்கள் உணரவில்லையே!

அன்பர் ஒருவரின் ஆர்வமடல்!

அன்புடையீர்,

வணக்கம். தங்களுடைய சொற்பொழிவை 8-4-84-இல் கேட்டு விளக்கமும், வீரமும் பெற்றேன். அங்கேயே 'தமிழ்நிலம்' வாங்கிப்படித்துக் கொள்கை அறிந்தேன்.

அதற்குமுன் தி.மு.க.தான் தமிழினத்தின் காவல் அரண் என எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால், 'தமிழா அசாமைப்பார்! பஞ்சாபைப்பார்!!' என முழங்கி வந்தவர்கள் இடைத்தேர்தல் வந்ததும் ஈழத்தமிழர் சிக்கலை ஒதுக்கி வைத்துவிட்டு நான்கு நாற்காலிகளைப் பிடிக்கச் சென்றுவிட்டது அறிந்து துயரப்பட்டேன். 'நல்வாய்ப்பை நழுவவிட்டார்' என்று அமிர்தலிங்கத்தை 83-இல் பேசியவர், இன்று இடைத் தேர்தலை நடத்தவிடாமல் எதிர்க்கவேண்டும் என்ற நல்ல முடிவை எடுக்கத் தவறிவிட்டார். அசாமில் தேர்தலைப் புறக்கணித்துப் பெரும்பான்மையானவர்கள் ஒப்போலையளிக்காமல் இருந்ததுபோல் எதிர்ப்பைக் காட்டியிருக்கலாம்.

தமிழீழ விடுதலைக்குத், தமிழின மேம்பாட்டிற்கு உ.த.மு.க. ஒன்றுதான் சரியான வழிகாட்டுகின்றது. ஆனால், பெருவாரியான தமிழர்கள் அதை உணரவில்லையே. உண்மை ஒருநாள் வெளியாகும்; உள்ளங்கள் யாவும் தெளிவடையும்! காலம் கனியட்டும்.

தங்கள் அன்பன்,
கோ. கண்ணன், பாளையங்கோட்டை

தமிழ்ப் புலத்தை மீட்போம்!

கடலூர். மணிமாறன், க.மு

எவரெவரோ எதையெதையோ பிதற்றிவர
இந்நாளில் தன்னலத்தில்
அவரவரும் அமிழ்ந்துள்ளார்; அணுவளவும்
இனப் நாடு மொழிப்பற் றின்றிக்
கவர்ச்சியினில் களியாட்டக் கேளிக்கைக்
காட்சிகளில் காலம் போக்கித்
தவறுகளில் மெய்மறந்து தவிக்கின்றார்!
தம்கடமை மறந்தே போனார்!

உணர்வின்றி ஊனுறக்கம் கொள்வதிலோ
உவப்பெய்தி உரிமை யின்றிக்
குணமிலராய்க் கொள்கையிலும் வலுவிழந்து
குழப்புவதில் முதன்மை பெற்று
மனம்போன போக்கினிலே மடைமாறிப்
பாய்கின்ற புனலாய் மாறிப்
பிணக்குகளில் தோய்ந்துவெறும் பேதையராய்த்
திரிவதிலே பெருமை கொண்டார்!

வரலாற்றை மறந்தோராய் வாய்கிழியக்
கத்துவதே வாழ்க்கை யாகி
உரமிழந்தும் திறமிழந்தும் உள்ளொன்றும்
புறமொன்றாய் உளறிக் கொட்டி
அரசியலில் பரத்தமையை அன்றாடம்
விதைத்துவரும் அறிவுக் கேடர்
கரவார்ந்த வினைகளினால் நமைப்பிணித்த
காரிருளும் விலக லுண்டோ?

அண்டையிலே நம்மினத்தார் அடைந்துவரும்
கொடுமையினை இழிவை யெண்ணி
மண்டுதழற் பிழம்பாகி மானத்தை
உயிராக மதித்தெ ழுந்தே
திண்டோள்கள் தினவடங்கத் தேடிவந்த
இனப்பகையை அழித்தொ ழித்துப்
பண்டையநம் வீரத்தைப் பாரறியப்
புதுக்கிடவே வழிகள் காண்போம்!

மொழிவளமும் இனநலமும் மூச்சொடுங்கி
மூலையிலே முடங்கிப் போக
அழியாத தமிழினத்தின் அரும்புகழோ
அவலத்தைச் சுமந்து நிற்க
விழிமூடித் துயில்கின்றோம்! விடுதலையை
நெஞ்சேந்திச் சூளு ரைத்தே
விழிப்புற்றுத் தளைநொறுக்கி விலங்கறுப்போம்!
தமிழ்ப்புலத்தை மீட்போம் நாமே!

நம் பார்வைக்கு வருகின்ற இதழ்கள்!

30) அரசி — 50 காசு — எசு. சண்முகசுந்தரம், 69. T.H.சாலை, புதுவண்ணை, சென்னை-81

31) கலைச்சுரங்கம் — 80 காசு — டி. அரங்கநாதன், வெங்கடேசபுரம், சென்னை-23

32) புதுப் புனல் — உருபா 1-00 — சி. என். கசேந்திரன், 7. ஏ. பண்ணுருட்டி சாலை, வடலூர்

33) ஏணி — 50 காசு — ஒடவை தமிழ்வேந்தன், 697. தனலட்சுமி பவனம், ஒட்டன்சத்திரம் 642619

34) திராவிட சமயம் — விலை குறிக்கப் பெறவில்லை — மு. தெய்வநாயகம், அயன்புரம், சென்னை-23

35) உண்மை — உருபா 1. — புலவர். இமயவரம்பன், 50, ஈ. வெ.கி. சம்பத்சாலை, சென்னை-7

36) முக்குடை — உருபா-1 — த. சம்பத்குமார், சைன இளைஞர் மன்றம், சென்னை-17.

37) அறிவியக்கம் — உருபா-1 — ச. நாத்திக நந்தனார், ஜி. எசு.டி. சாலை, வண்டலூர், சென்னை-48

38) அந்தமான் முரசு — 60 காசு — சுப. சுப்பிரமணியம், போர்ட்டு பிளேயர், அந்தமான்

39) வள்ளுவர் வழி — உருபா ஒன்று — கல்லை. தே. கண்ணன், 3. தேசி காலனி, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை-12

40) தீ பரவட்டும் — 75 காசு — அ. இரா. மருதவாணன், போர்ட் பிளேயர் அந்தமான்.

41 சிகப்பு நாடா — 60 காசு — கபிலை மன்னன், புரசைவாக்கம், சென்னை-84

தமிழ் படியேறின் தமிழினம் ஏறும்!

ஒய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 39 (17-6-84) பகுதி 21-26

தமிழ்த்தேசிய இனவுணர்வாளர்கள் ஒன்று சேர வேண்டும்!

இந்தியாவில் அடுத்துவரும் காலம் தேசிய இனவிடுதலைப் போராட்டக் காலமாகும். இதை யாரும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

பஞ்சாபில் இறுதியாக அரசு மேற் கொண்ட முயற்சிகள் எந்த ஓர் ஆளும் பிரிவும் இயல்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளே. எனவே அதுபற்றி யாரும் அச்சமடையவோ கலக்க மடையவோ தேவையில்லை. ஆனல் இப்போராட்டக் கலவரங்களுக்குப் பின்னர் படிநிலை வளர்ச்சியுறும் (பரிணாமமுறும்) மக்கள் மனவெழுச்சிகளுக்கு நாம் முகாமை (முக்கியத்துவம்) அளிக்க வேண்டும்.

ஒரு நாடு எவ்வளவு முகாமையானதோ அவ்வளவு முகாமை யானவர்கள் அதன் மக்கள். இனி, மக்களில் ஆளும் பிரிவினராகிய ஆட்சியாளர்க்குச் சார்பாக இயங்குபவர்கள் எவ்வளவு மதிக்கத் தகுந்தவர்களோ, அவ்வளவு மதிக்கத் தகுந்தவர்களே, அவர்களுக்கு எதிரானவர்களும். குடியரசமைப்பின் நேர்மையான அரசியல் இலக்கணம் இது. எனவே, ஆட்சியாளர்க்கு எதிராக மக்களில் ஒரு பகுதியினர் கிளர்ந்து எழுகிறார்களென்ருல், அக் கிளர்ச்சியினை அடக்கியொடுக்க அரசினர் முனைவது குடியரசு அமைப்பு முறைப்படி அறியாமையிலும் அறியாமையாகும். கொள்கை முடிவுகள் (சித்தாந்தங்கள்) என்றும் சாவதில்லை; அவற்றைச் சாகடிக்கவும் முடியாது.

குடியரசுக் கொள்கைப்படி, இணைப்பாட்சிக்கு எத்துணை மதிப்புண்டோ அத்துணை மதிப்பு தனிப்பிரிவு ஆட்சிக்கும் உண்டு. பல்வேறின மக்களின் மனவுணர்வைப் பொறுத்த செய்திகளே இவை! 'இந்தியா ஒருநாடு'' என்று நிலக்கோள அமைப்பை வலியுறுத்திப் பேசும், ஆட்சியாளர்கள், மக்களின அமைப்புக்கும் அதைப் பொருத்திக் காட்டிவிட முடியாது. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்டநாடு இந்தியா. இதில் எந்தக் கருத்து வேறுபாட்டுக்கும் இடமில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த செய்தி. ஆனாலும் ஆட்சியாளர்கள் ஏதோ ஒரு மந்திரமாயப் புரட்டுப் போல, இந்தியா ஓராட்சி முறையில் இயங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றனர். அதில் தங்கள் தந்நலவுணர்வு தவிர வேறு அடிப்படைகளைக் காரணங்களாகக் காட்டிவிட முடியாது. இந்த உணர்வும் ஒருமைப் பாடும் ஆட்டங் காண வேண்டிய காலம் வந்து விட்டது என்பதையே பஞ்சாப், அசாம், நாகலாந்து, மிசோராம் முதலிய இனக் கலவரப் போராட்டங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தேசிய இன விடுதலை உணர்வு என்றோ கனிந்து பயன் நல்கியிருக்க வேண்டும். கொளுத்தப்பட்ட வெடி இடையில் அணைந்து விட்டது போல், ஏனோ சூடு மங்கிக் கிடக்கிறது. இதற்குக் காரணம் இங்குள்ள பல்முனைப் போராட்ட முயற்சிகளே ஆகும். பல்முனைப் போராட்ட முயற்சிகள் எப்பொழுதும் இனவிடுதலையைப் பின்னடைவு செய்வன ஆகும் என்பதை, இங்குள்ள இன விடுதலைத் தலைவர்களாகத் தங்களை அறிமுகப் படுத்திக் கொள்ளும் அரசியல், குமுகாயத் தலைவர்கள் உணராமல் இருக்கிறார்கள். உணராமல் இருக்கிறார்களோ, அல்லது உணர்ந்தும் துணியாதவர்களாக இருக்கிறார்களோ, நாம் அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க நேரமில்லை.

• தமிழினத்தின் ஒட்டுமொத்த நலமே, தமிழக விடுதலையில் தான் இருக்கிறது என்பதைத்தமிழின மக்களில் பெரும்பாலார் உணர்ந்திருந்தும், இவ் விடுதலை முயற்சிகள் ஏனோ இன்னும் இங்குத் தலையெழுச்சி கொள்ளாமல் இருக்கிறது. இவ்வெழுச்சி காலத்தால் தூண்டப்பெறுவதற்கும், வழி நடத்திச் செல்லப் பெறுவதற்கும் உரிய தலைவர்கள் மக்களைப் பல்வேறு திசைதிருப்பு முயற்சிகளில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் · தமிழினம் இன்று எழுச்சி கொள்ளாவிடில், இதன் உள்ளுணர்வும், உந்து வேகமும் காலத்தால் கரியாகிப் போய்விடும் என்று நாம் அஞ்ச வேண்டியுள்ளது.

எனவே, பஞ்சாபியரின் போர்க்குணமும், வீர வெடிப்புகளும் உடனடியாகத் தமிழர்களிடம் தோன்றியாக வேண்டும். அதன் உந்து விசையை ஒருமுகப்படுத்தும் ஒரு கூட்டு முயற்சி தமிழ்த்தேசிய இன விடுதலையை விரும்பித் தவங்கிடக்கும் இளைஞர்களிடையில் காழ்கொண்டு எழுச்சி பெறுதல் இன்றைய நிலையில் மிக மிக இன்றியமையாதது.

இது தொடர்பாக, விரைவில் சென்னையில் ஒரு கலந்துரையாடலை நாம் தொடங்கியாக வேண்டும். அம் முயற்சியின் வரவேற்பைப் பொறுத்தது அதன் செயற்பாடு. எனவே, இம்முயற்சியை முழுமனவுணர்வுடன் வரவேற்கும் தனிமறவுணர்வுள்ளங்களும், ஆங்காங்குக் கிளர்ந்துள்ள இன விடுதலைச் சிற்றியக்கங்களும் ஒன்றிணைந்து ஒரு விடுதலைக் கூட்டணியை உருவாக்க முன்வருதல் வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அத்தகைய துணிவான செயல்களுக்குத் தம்மை உள்ளாக்கிக் கொள்ள விழையும் உணர்வாளர்கள் உடனடியாக எங்களுக்குத் தம் உறுதி மொழிகளை வழங்கக் கேட்டுக் கொள்கிறோம்! வெல்க, தமிழ்த்தேசிய இன, நாட்டு விடுதலை முயற்சிகள்! ()

திராவிடசமயம்-ஒரு விளக்கம்

— புலவர். மு. தெய்வநாயகம், க.மு.

அன்புடையீர்,
வணக்கம்.

'திராவிட சமய'த்தில் வெளிவந்த அறிமுகக் கட்டுரையைத் 'தமிழ் நிலத்'தில் வெளியிட்டமையைப் பாராட்டுகிறேன்.

அதில், ஆசிரியர் பின் குறிப்பில் நீங்கள் எழுதியுள்ள கருத்துகளுககுரிய விளக்கத்தை இத்துடன் இணைத்துள்ளேன். இவ்விளக்கத்தையும் 'தமிழ் நிலத்'தில் வெளியிட்டால் பயனுடையதாக அமையுமென நம்புகிறேன். நன்றி.

தங்களன்புள்ள,
மு. தெய்வநாயகம்.

எமது ''திராவிட சமயம்'' இதழில் வெளிவந்த கட்டுரையைத் தங்களின் ''தமிழ்நிலம்'' இதழ்களில் (1-4-1984, 15-4-1984) தொடர்ந்து வெளியிட்டுக்-கருத்தைப் பரப்பியமைக்குத் திராவிட சமய ஆய்வு இயக்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டுரையின் இறுதியில் ''ஆசிரியர் பின் குறிப்பு' என்ற தலைப்பில், ''சில கருத்துப்பகுதிகள் நமக்கு முற்றும் உடன்பாடில்லை'' எனக்குறிப்பிட்டுத், (1) 'திராவிட சமயம்' என்றழைப்பதை விட, 'தமிழ்ச்சமயம்' அல்லது 'தமிழர் சமயம்' என்றழைப்பதே வரலாற்றடிப்படையில் மிகச் சரியானது எனவும், (2) வைதீகத்தையும் திராவிட சமயத்தில் சேர்க்கலாம் என்பது மிகவும் தவறானது எனவும் இரண்டு கருத்துகளைத் தெரிவித்துள்ளீர்கள்.

தமிழம் என்ற சொல்லையே ஆரியர், திராவிடம் எனத் திரித்து வழங்கினராதலின் தமிழ்ச்சமயம் என்றழைப்பதே மிகவும் பொருந்துவதாகும் எனுங்கருத்து வரவேற்றற் குரியதே. வரலாற்று உண்மையுங்கூட. ஆனல் மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு போன்ற மொழிகள் தமிழிலிருந்து பிரிவதற்கு முற்பட்ட நிலையில் தமிழர் என்பது மொத்த இனத்தையும் சேர்த்துக் குறித்தது. தற்போது தமிழர் என்பது தமிழ்மொழியைப் பேசும் மக்களை மட்டும் குறிக்கக்கூடிய அளவிற்குக் குறுகிவிட்டது. மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளைப்பேசும் மக்களைத் தமிழர் என்ற சொல் இப்போது குறிக்கவில்லை. இச்சூழலில் பிரிவிற்கு முந்திய - தமிழ்மக்கள் எல்லோரையும் சுட்டும் சொல்லாக, இனத்தைக் குறிக்கும் சொல்லாகத், 'திராவிடர்' என்ற சொல் வழக்கிற்கு வந்து விட்டது. ஆகவே இன்றைய சூழலில் தமிழர் என்பது தமிழ்மொழி பேசும் மக்களையும், திராவிடர் என்பது பிரிந்து நிற்கும் தமிழ் உடன்பிறப்பினர்களாகிய மலையாளர், தெலுங்கர், கன்னடர், துளுவர் முதலிய எல்லோரையும் குறிப்பதாக வழங்குகின்றன.

ஆகவே, திராவிட சமயம் என்பது ஆரியச் சமயத்திற்கு-ஆரிய இனத்திற்கு-மாறுபட்ட திராவிட இனத்திலிருந்து தோன்றிய சமயம் என்பதைத் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. தமிழ்ச்சமயம் எனின் தெலுங்கு சமயம், மலையாள சமயம் என நமக்குள்ளேயே வேறுபட்டு நிற்கின்ற நிலை ஏற்படுமல்லவா?

'வைதீக சமயத்தையும் திராவிட சமயத்தில் சேர்க்கலாம் என்பது மிகவும் தவறானது'' என்ற தங்களின இரண்டாம் கருத்து மேலெழுந்தவாரியாகப் பார்க்குங்கால் சரியானதாகத் தோற்றமளித்தாலும், ஆழ்ந்து நோக்குங்கால் மாற்றப்பட வேண்டிய கருத்து என்பது புலனாகும். வருணாசிரமம் நீக்கப்படவேண்டிய நச்சுத் தன்மை கொண்டது என்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆனல் நான்கு வேதங்களோ சமய வளர்ச்சியைக் காட்டும் படிகள் எனலாம். அப் படிகள் தோன்றுவதற்கு அடிப்படையாய் விளங்கியது திராவிட இனமேயன்றி ஆரிய இனமன்று. திராவிட இனத்திற்குரிய சொத்தினையெடுத்து ஆரிய இனத்திற்கும் உரிமையாக்குவது வரலாற்றுத் தவறாகும். ஆரியர் இந்தியாவிற்குள் வரும்போது எந்த வேதத்தினையும் கொண்டு வரவில்லை. ஆகவே, வேதங்கள் நமது சொத்தாகும். இன்று வேதத்தைப் பின்பற்றும் வைதீக சமயம் அழிந்து விட்டது. வேதங்களின்படி, உயிர்ப்பலியிட்டு வேள்வி செய்து பலியிடப்பட்ட இறைச்சியை உண்போர் எவருமிலர். ஆகவே, வைதீக சமயத்தைத் திராவிட சமயத்தில் சேர்ப்பது, 'வேதங்கள் திராவிட இனத்திற்கேயுரியது'' எனக் குறிக்கிறதேயன்றி, அவ்வேதங்களைக் கையாண்டவர்களின் சூழ்ச்சிகளையும், நச்சுக் கருத்துகளையும், நச்சுக் கருத்துகளையும் ஏற்றுக் கொள்வதாகாது.

''இந்தியாவின் சமயமூலம் தமிழருடையது'' என்ற கருத்துக்குத் தாங்கள் தெரிவித்துள்ள ஆதரவிற்கும், 'சமய வரலாற்றைத் தெளிவாக உணரக் கட்டுரை துணை செய்யும்' என்ற தங்களின் கருத்துரைக்கும் எமது நன்றி. ()

ஊர் தோறும்
உ.த.மு.க
அமைப்புகளைத்
தொடங்குங்கள்!

உங்கள் ஊரில்
உ.த.மு.க.
கிளைக் கழகம்
இல்லையா?

உடனே
தலைமையகத்துடன்
தொடர்பு கொண்டு
கிளை அமைய
அனைத்து
முயற்சிகளையும்
செய்யுங்கள்!

தலைமையகம்.
உலகத்தமிழின
முன்னேற்றக்கழகம்,
சென்னை-5

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

தாழ்நிலை இழிவுகள் மாறும்!

தமிழீழச் சிக்கல்

புரட்சி இயக்கங்களின் போக்குகள்

ஓர் ஆய்வு வழித் தேடல் — ஒளியன்

தேசிய இனம் - தற்சார்பு - உரிமைச் சிக்கல் பற்றியும் முதலாளியத் தேசியக் கருத்துபற்றியும் ஒரு வெளியீடு கண்டேன். இது 'இலங்கைத் தமிழர்கள் சிக்கலுக்குச் சரியானதீர்வு தமிழீழ நாடு பெறுவதே' என்ற கருத்தையும், 'தமிழீழநாடு பெறுவது படையேந்தும் போராட்டத்தின் மூலமே' என்ற வழிமுறையையும் திறனாய்வதற்காக எழுதப்பட்டதென்கின்றனர்.

"இது வல்லரசுக் காலம். எனவே, தேசிய இனச்சிக்கல், புரட்சிக்குப் புதிய எல்லைகளை வகுத்துள்ளது. ஆகவே தேசியஇனம் தனிஅரசாகப் பிரிவதும், தொழிலாளர் வகுப்புத் தனித்தனியாகக் கட்டப்படுவதும் வேண்டும்", என்ற கருத்தை மார்க்சியத்திற்கும், இலெனினியத்திற்கும் புறம்பானது என்கின்றது அந்த நூல்!

தேசம், இனம், மக்கள் பற்றிய ஆய்வில் பாட்டாளி வகுப்பு ஓர் உலகக் கண்ணோட்டம் கொண்டிருக்கும் 'தனிநாடு' என்பது உலகஉறவைத் துண்டிப்பதாகாது. அப்படிப்பட்ட 'துண்டு' பட்ட நாட்டை உலகில் காட்ட முடியாது. இவ்வாறாக, ஒரு தேசியஇன எல்லையைத் தீர்மானிப்பதில் 'வரலாற்றுக் கட்டாயம்' உள்ளது அதற்கான உண்மையை 'மாயவாதம்'புரிந்து தடுத்தல் முடியாது. எனவே, 'பிரிவினை'க்கான நிலைமை ஆய்வு வேண்டும்!

தமிழ்நாடு என்ற ஓரின எல்லைக்குள், தெலுங்கு, சௌராட்டிரம், கன்னடம், உருது, மராட்டியம் என்ற மொழி,இனச் சிக்கல்கள் இருக்கின்றன. 'தமிழினம்' என்ற உடன்பாட்டில் இத்தீர்வுகளை மக்களாட்சி முறையில் தீர்ப்பதற்கு முயலுவது கட்டாயமாகும். வல்லரசுகளின் பிடியிலிருந்து விடுபடப் போராடும்போது, உள்ளே குதிபோடும், நிலவுடைமையையும், பிரிவினைக்கு உரம்போடும் 'வல்லரசுப் போட்டிகளை'யும் கணக்கில் கொள்ளுதல் வேண்டும். ஒரு தெளிவான மக்கள் சார்பு - பாட்டாளி வகுப்பு இபக்கமே இதற்கான தீர்வு கூறும். என்றாலும், 'மேலோங்கி வரும்' வல்லரசுப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள ஒன்றுபட்ட இனஎழுச்சியைச் சார்ந்து நிற்பது வரலாற்றுக் கட்டாயமாகவுள்ளது!

பிரிந்து போகும் உரிமை உண்டு. அதே நேரம் பிரிந்து போவதே அனைத்துச் சிக்கலுக்கும் தீர்வு என்று பகட்டுவது போலிமையாகும். உரிமையைத் தீர்வுக்காகப் பயன்படுத்தும் தேசியஇனம், பிற தேசிய இனங்களுடன் இணங்கி நிற்கும். அடிப்படை வகுப்புடன் தோள்தந்து உறவு கொள்ளும். எனவே, பிரிந்து போகப் போராடும் அணியிடம் 'தீர்வு' அமையும், 'தீராது' என்று 'கோடாங்கி' அடிப்பதை விடத் தீர்வுக்கும் தீராமைக்கும் காரணமான வல்லரசாளுமை எதிர்ப்பைக் கட்டுதல் வேண்டும். இதில் ஒளிவு மறைவில்லை

'பிரிவினை' என்பது 'உரிமை உண்டு' என்ற நினைப்பிலேயே வேண்டப்படுவதாகாது. செயற்கையாகக் கட்டப்பட்ட தேசிய இனங்களின் தளைகளை உடைப்பதில் 'பிரிவினை' உருவாகின்றது. வல்லரசு எதிர்ப்பிலேயே, 'ஒற்றுமை' எழுகிறது. இவ்வொற்றுமைக்கான ஆற்றல் திரட்சியில், 'உரிமை' உண்டு என்ற 'உறுதி' அதற்குள்ளேயே பொதிந்து கிடப்பதாகும்.

வருவதும் போவதும் - கொடுப்பதும் எடுப்பதுமான அனைத்து வன்மையும் கொண்ட ஒரு நாட்டில் 'பிரிவினை' தேசிய அளவில் ஏற்படுவதைக் காண்கிறோம்! தேவையை ஒட்டித் தடையும், தடை நீக்கமும் செய்கின்ற வல்லரசாட்சியைப் பிரிவினையால் எதிர்த்து முறியடிக்க முயல்கின்றனர். அதற்கான கூறுகளும், நிலைமைகளும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இவற்றைத் தடுக்கின்ற நிலைமை உலக வரலாற்றில் எழவில்லை. வல்லரசாட்சியே அதன் தடையும் உதவியும் ஆகும். தீர்மானிக்கும் தகுதியில் தேசியஇனங்கள் வளர்ச்சிபெற்று வருகின்றன!

'பிரிவினை' 'ஒற்றுமை' இரண்டும் பாட்டாளி வகுப்புப் பிரிவினை எதிர்ப்பு, பாட்டாளிவகுப்பு ஒற்றுமை ஆதரவு என்ற அளவிலேயே ஏற்கப்படுவன. அவர்களின் தீர்மானம் 'தேசியஇனப்பிரிவினை' ஒத்துழைப்பில் முடியுமானால் ஏற்பதில் தடையில்லை.

முரண்பாடுகளின் வளர்ச்சிகள் போக்குகள் பிரிவினை'க்கான அனைத்துக் கட்டாயத்தையும் கருவனவாக இருப்பதைக் காணமுடியும். அசாம், பீகார், டார்கண்டு என்ற 'மாநில நடுவண் எதிர்ப்புணர்வுகள்' பற்றியும், தமிழ் நாட்டின் நீண்டகாலச் சிக்கல் பற்றியும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்; சேர்ந்துவாழும் விருப்பம் உருவாக்கப்படுவது எப்போது என்பதைப் புறச்சூழல் கணிப்பில் கூற முடியும். அதற்கான நிலைப்பாடு இன்றில்லை. 'பிரிந்து போகும்' அகச்சூழல் பெருகிவருகின்றது. வல்லரசொன்று மட்டுமே 'ஒற்றுமை'யை ஓதிக் கொண்டிருப்பது! மக்கள் விரும்புவது விடுதலை என்பதில் ஐயமில்லை.

பாட்டாளிவகுப்பிடம் செல்லச் செல்ல ஒரு கட்சி தன்னை விரிவுபடுத்திக் கொள்ளும். அதன் குறுங்குழுக் கருத்துகள் சிதறிப்போகும்போது பாட்டாளி வகுப்பின ஒற்றுமை எஃகுறுதி கொள்ளும். வலிமைப்படும்!

ஒரு கட்டாயப்படுத்தல் இல்லாமல் இணைய வேண்டும் என்கின்ற அமைப்புகள் வேறுவேறு வகுப்பு நிறுவனங்களை ஒரே வகுப்பார்க்குள்ளும் அமைத்துக் கொள்ளுகின்றன. அவை ஒரு வகுப்புணர்வு கொண்டு ஒன்றுபட்ட போராட்டத்திற்கும் வருவதில்லை. இந்நிலையால் இவர்களின் தேசியஇனப் பேச்சு எடுபடுவதில்லை!

கருத்துவேறுபாடுகளை நடைமுறையில் ஒன்றுபட்டுத் தீர்க்கும் மக்களாட்சிப் பண்பு ஊக்கம் பெறவில்லை. தலைமைகள் 'கருத்துகளின்' தந்தைகளாகத் தங்களைத் தப்பட்டமடித்துக் கொள்வதும் ஒரு காரணமாகும்!

குறிப்பிட்ட நிலைமையில் மட்டுமே பிரிவினை ஆதரித்தல் என்ற கருத்து ... மக்கள் ஆதரிப்பிலேயே உள்ளது அதற்கான உருவாக்க விளைவு - உறவுகளைப் பற்றிய பொருளாய்வு - இயங்குதல் பற்றி ஆராய்தல் வேண்டும். இதில் புரட்சியமைப்புகள் முனைப்பாக இல்லை. முதலாளிய ஆய்வின் முடிவுகளை மட்டும் நம்பிப் பயனில்லை. அப்படி ஆய்வுநடத்துகின்றவரும் அதன் சாரத்தைப் புரியவைப்பதில் மேலும் அடிமட்டத்திற்குக்கொண்டு போவதில் வெற்றிபெறவில்லை. இங்கும் வல்லரசே ஊடுருவி நிற்கிறது; ஆளுமை செய்கிறது.

'இந்தியா' நினைப்பில் 'அனைத்து மாநிலமும்' தனித்தனிக் கோள்களாக இயங்குவதை, உணர்கின்றனர். அவர்களின் உணர்தல் மூலம் 'பிரிவினை'யைச் சார்புநிலையில் பேசுகின்றனர். தமிழ்நாட்டின் நிலைமைக்குக் கூடப் பொருத்திப் பார்க்க விரும்பாது 'தமிழீழநாட்டோடு' மட்டும் நின்று விடுகின்றனர். வல்லரசின் ஆளுமையைப்பற்றிய பொதுநெறியை உறுதியாக எதிர்க்கும் 'தேசிய இனங்களைப் பட்டியலிட்டுக் காட்டுவதும் புரட்சியமைப்புகளின் கடமையாகும். அதற்கான சூழல் இல்லை எனில், வல்லரசு ஆளுமையின் உள் முரண்களைப் பற்றியும் எழுதுதல் வேண்டும்!

முடிவெடுக்கும் உரிமை பெற்ற தேசிய இனமாக மலர அதற்கான 'விடுதலை' ஊக்கம் எங்கிருந்து வாய்க்கும்? வல்லரசின் ஆளுமைப் பிடியிலிருந்து விடுவிக்கப் போராடும் அமைப்புகள் தேசியஇன விடுதலைக்காகவும் ஒன்றுபட முடியும். வெறும் உரிமைக் கோரிக்கையால் மட்டும் இது நிகழப் போவதில்லை! அக் கோரிக்கை ஒரு தந்திரமாகவே பயன்படும். அஃது ஒரு நோக்கமாக முடியாது. 'கொள்கை' உரமாகாது! அஃது அடிமைப்பிடிக்குள் அகப்படுத்தவும் கூடும். புரட்சிக் கடமைக்கு முன் உள்ள 'தேசிய இனச்சிக்கல்' பற்றிய கண்ணோட்டம் - பாட்டாளி வகுப்பின் தலைமையில்தான் தீர்வு பெறும் என்று காத்திருப்பதில்லை, அதன் இயக்கம் பாட்டாளியின் தலைமையை உருவாக்கும்! அதுவரை ஓய்ந்திருப்பதில்லை 'தேசியஇன விடுதலை! - ஏனெனில் வல்லரசு ஆளுமையை எதிர்ப்பதில் தேசியஇனத்தோடு முதலாளியம் ஆர்வம் காட்டுவதை நாம் ஒப்புக் கொண்டே ஆகல் வேண்டும். அதனைப் புறக்கணிக்கவும் முடியாது. வல்லரசு ஆளுமை எதிர்ப்பணியில் சேரும் தேசிய முதலாளியத்தின வகுப்புணர்வினை நாம் மறந்துவிடுவதில்லை.

இந்தியா துணைக்கண்டம், இந்தியா ஒரு நாடு. இந்தியா பல தேசிய இனங்களைக் கொண்டது இப்படிப்பல படக் கூறுகின்றனர். இவற்றில் பல தேசிய இனங்களைக் கொண்ட - பல நாடுகளைக் கொண்ட - ஒரு துணைக்கண்டம் என்பதே பொருத்தமான கருத்துரையாகும். இல்லையெனில், வல்லரசு ஆளுமை உணர்வுடன் கூறுவதே பிறகணிப்பாகவும். இதற்கான தந்திரப் பேச்சுகளைவிட, 'கொள்கை' யறிவிப்புதான் சரியாதல் கூடும்! 'உறவுக்குக் கை; உரிமைக்குக் குரல்' என்ற முழக்கம் எவ்வளவு வெளிப்படையாக மக்களுக்கு இரண்டகம் செய்கிறது என்பதைப் பார்த்தல் வேண்டும். உரிமை இல்லாத இடத்தில் 'இலை'யைப் போட்டதும் ஓடிப் போய் அமர்ந்து கைநனைக்கிற எச்சில்கள், உரிமை பற்றி என்ன பேச முடியும். பந்தியில் இடமில்லை என்கிறபோது 'இலை பொத்தல்' என்ற குரல் எடுபடுமா? எனவே, 'தந்திரப்பேச்சுகள்' விடுதலைக்கு மாறாகக் கெடுதலையே தரும் என்பதை நாம் உணர்தல் வேண்டும்!"

இனப் பண்பாடு, உரிமை நலன்களை மறுக்கின்ற வல்லரசு ஆளுமை எதிர்ப்பின்றி 'அடிமைப்பட்டுள்ள தன்னையொத்த இனப்பண்பாடு உரிமைகளை மறுப்பதும் இழிவு படுத்துவதும் ஓரின விடுதலையுணர்ச்சி ஆகாது!

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம் பார்க்க)

பாராட்டும் செயல்.... எனினும் சிந்தனைக்கு!

யுனெசுக்கோ 'கூரியர்' இதழ் இருபத்தேழு உலக மொழிகளில் வெளிவருகிறது. இந்திய மொழிகளில் தமிழிலும், இந்தியிலும் மட்டுமே வெளிவருகின்றது. வரும் தமிழ்ப் 'புத்தாண்டினை(!) முன்னிட்டு தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பிதழாக வெளிவருகிறதாம். வேறு எந்த மொழிக்கும் கிடைக்காத பேறு தமிழுக்கு.

தமிழ்ப்பதிப்பின் ஆசிரியர் மணவை முசுதபா. அவருடன் நேருரை கண்டு 11 3.84 நாளிட்ட கிழமைஇதழ் 'குங்குமம்' வெளியிட்டுள்ளது.

அண்மையில் பாரிசில் நடைபெற்ற கூட்டத்தில் 'இந்தி'கூரியர் கிருட்டிணமேனன்பால், தமிழ்ப் பண்பாடு என்பதற்குப் பகரமாக இந்தியப் பண்பாடு (பண்பாடு என்பதற்குக் 'கலாச்சாரம்' என்ற சொல்லையே ஆண்டுள்ளார்கள்) என்று போட்டால் சிறப்பாக 'இருக்குமே' என்று சொல்ல,

முசுதபா அவர்கள், 'இந்தியப்பண்பாடு என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்? என்று வினவ,

'இந்தி'யர்,சைன,புத்தப்பண்பாடுகள் இருக்கிறதே என்று சொல்ல.

அவையெல்லாம் மதப்பண்பாடுகளே தவிர தேசியப்பண்பாடுகளாகக் கருதமுடியுமா? ஆனால், தமிழ்ப்பண்பாடோ அப்படிப்பட்டதன்று. அது முழுக்க முழுக்க நாட்டின் ஒரு பகுதி மக்களுடைய தேசியப்பண்பாடு. மேலும் பல பண்பாடுகளை உள்ளடக்கிக் கொண்ட கலவைதான் இந்தியப் பண்பாடு. தமிழில் பண்பாடென்பது தமக்கென தனித்தன்மையுள்ள, ஐயாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் வாழும் பண்பாடு என்று வழக்காட,

அவையோர் இதனை ஏற்றுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றினார்களாம்.

தமிழ்ப்புத்தாண்டில்'!) அஃதாவது ஏப்பிரல் மாத இதழ் தமிழ்ப் பண்பாட்டிதழாக வெளிவர இருக்கிறதாம். மேலும் அவர், இதன்மூலம் உலக ஆராய்ச்சியாளர்களின் கவனம் தமிழின்மீதும் தமிழன் மீதும் திரும்பும் என்றும், இதுவரை எட்டாயிரம் தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்கியிருக்கிறேன்; இன்னும் இரண்டு ஆண்டுகளில் இதன் எண்ணிக்கை பத்தாயிரத்தை எட்டியதும் 'கூரியர்' தலைமையில் 'தமிழ்க்கலைச் சொற்கள் அகராதி' வெளியிட ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அறிவியற் சொற்களுக்குத் தகுந்த தமிழ்ச் சொற்கள் கிடைக்கா என்று கூறி வந்தோருக்கு இத்தொகுப்பு ஒருவெல்விளியாக (சவாலாக) இருக்கும் என்றார்.

மேற்கண்ட நேருரையில்,

"தமிழ்த்தேசிய இனம் என்பதைத் தெளிவாக உணர்த்தும் முசுதபா அவர்கள், அந்த இனத்தின் தனிப்பண்புகளில் தலையாயது அதன் ஆண்டுத் தொடக்கமன்றோ?

சுறவத் திங்கள் தொடங்கி ஆண்டு கணக்கிடப்படும் முறையை வெளிப்படுத்தாது, மேழம் (சித்திரை) முதலே தமிழ்ப்புத்தாண்டெனப் பொருள்படும்படி கூறியுள்ளார். "இந்திக் கூரியரோடு வழக்காடியதும், தமிழின் தனித் தன்மையை விளக்கியமையும் பாராட்ட - போற்றத் தகுந்தனவே, எனினும், தமிழ்த் தாயின் தலையாய பண்பு விடுபடக் கூடாதே.

— தமிழ்வென்றி, தாராபுரம்.

குலப்பிரிவு இன்னமும் உனைவிட்டதில்லையே!

தீத்தழ லென்ன தென்மொழி கொண்டு தினவுச் சொற்களை வார்க்கும் - நும் திருக்கை யேபகை தீர்க்கும்!

— முனைவன் —

எப்படி வளர்ப்போம் உ.த.மு.க.வை
என்னரும் பாவல ரேறே — எம்
எலும்பின் தசையின் சாறே!
செப்படி வேலையில் செந்தமிழ் நாட்டார்
சிந்தை மயங்கிய நிலையில் — ஒரு
சிறிது மில்லையே தலையில்!
தப்படி கொண்டே தத்தங் கட்சியைத்
தரையில் நிறுத்தினர் தலைவர் — அவர்
தாயை வீழ்த்திய புலையா!
ஒப்படி வேண்டும் உங்கள் தொண்டில்
உருவிடு வீர்கை வாளை — வரும்
உலகம் ஏற்கும்நம் நாளை! (1)

மேடையில் நின்று மேனி குலுக்கி
மீசையை முறுக்கிப் பேச்சில் — பலர்
மாடி கட்டினர் மூச்சில்!
பாடையின் பிணத்தைப் பந்தலில் வைத்துப்
பதவிக் கழுதனர் பகட்டில் — அவர்
பணத்தில் மட்டுமே முகட்டில்!
பாடைகள் கழுதைகள் கட்டையில் போகக்
காட்டிடு வீரே வழியை — நம்
கடமை துடைக்கட்டும் பழியை!

வாடையில் வறுமையில் வஞ்சகர் தீயில்
வதங்கிடும் பாவல] ரேறே — எம்
வாழ்விலும் சாவிலும் நீரே! (2)

நெற்றி "வியர்வையில் நித்தமும்" மக்கள்
நெஞ்சு ஒடிவதோ நாட்டில்! — இனும்
நீட்டி யெழுதவோ ஏட்டில்!
முற்றிய இருள்மன மூடத் தலைவர்
மூலையில் ஒடுங்குவ தென்றோ — இனி
மூச்சு விடுவதும் நன்றோ!
விற்றிடு வாரோ வடவரின் காலில்
விறல்தமிழ் மக்களை ஏய்த்து — நாம்
வீழ்த்திடு வோமதைச் சாய்த்து!
கற்றிடு செந்தமிழ்க் கடமைத் தலைவ
களிறென எழட்டும் இயக்கம் — இதில்
காட்டிட வேண்டாம் தயக்கம்! (3)

காசு சேர்த்திடக் கற்றவர் யாவரும்
காற்றில் பறந்திட நாயாய் — நம்
கடமை செய்குவோம் தீயாய்!
தூசு துகள்களைத் தொங்கல் மாலையாய்த்
தொந்தி மாடுகள் சூட — உடன்
துரத்து வோமவர்கள் ஓட!
மாசு நெஞ்சரோ மக்கள் தொண்டரென
மன்றில் நின்றுவாய் மீட்ட — அவர்
மங்கி அழியகை நீட்டும்!
பேசு செந்தமிழப் பேணி வளர்த்திடும்
பெருமைச் சித்திர னூரே — நும்
பீடு முழங்குமினிப் பாரே! (4)

கூத்திடு தொழிலர் கொள்கைகள் பேசிக்
கொடுங்கோ லரசே படைக்க — நாம்
கொதித்தெழு வோமதை உடைக்க!
ஆர்த்திடு மின்னல் அடைமழை யெல்லாம்
ஆர்துணை யென்றுகை நீட்டும் — நம்
•அடிமைக் காகச்செயல் தீட்டும்!
தீத்தழ லென்ன தென்மொழி கொண்டு
தினவுச் சொற்களை வார்க்கும் — நும்
திருக்கை யேபகை தீர்க்கும்!
பார்த்திருப் போமா பாவல ரேறே
பகையை நும்கால்கள் இடற — யாம்
பதைத்தோம் நுமதடி தொடர! (5)

வடக்குக் கதவினை வலியப் பூட்ட
வாளில் சிலர்தலை உருட்டி — இனி
வைத்திட வேண்டும் மிரட்டி!
துடுக்குப் பார்ப்பான் தொலைந்து போகவே
துமுக்கி யேந்தவும் வேண்டும் — பெருந்
தூளி கிளம்பட்டும் யாண்டும்!
கொடுக்குத் தேளர் கொள்கையென் றின்னும்
கூறி யடிப்பதோ கொள்ளை — இக்
கொடுமைக் கிதுதான் எல்லை!
எடுக்கக் குறையா எழுத்துச் சுரங்கம்
எவர்க்கும் நிறுவிய தலைவ — இனி
எதிரிகள் சிதறிக் குலைவர்! (6)

— தமிழவேள்

"அண்ணா !"

"என்ன தம்பி ?"

"ஒரு கிழமை ஏட்டுப் பலசரக்கில் ஒரு மூட்டை அவிழ்த்துவிடப்பட்டிருக்கிறதே, பார்த்தீர்களா?"

"எதனைச் சொல்கிறாய் தம்பி?"

"காமராசர், பக்தவசலம் காலத்திலிருந்தே பார்ப்பனர் யாரும் மாவட்ட "செசன்சு நீதிபதி" பதவிக்கு நேரடியாக அமர்த்தப்படவில்லை — என்றும், அவ்வாறு அமர்த்தப்படாத முப்பது ஆண்டு நிறைவு விழாவையும் கொண்டாடலாம் என்றும் எழுதப்பட்டுள்ளதே!" பார்க்கவில்லையா?"

"பார்த்தேன்."

"மாவட்டநடுவர் பதவியைவிட மாநில அஞ்சல் துறை அதிகாரி என்னும் பதவி பெரிய பதவிதானே?"

"ஆமாம்."

"அந்தப் பதவியில் ஆங்கிலேயர் காலத்திலிருந்தே தமிழர் எவரும் இருந்ததில்லையாமே! எழுபது எண்பது ஆண்டுகளாக வேறு மாநிலத்தவரோ அல்லது பார்ப்பனரோதான் அந்தப்பதவியில் இருந்து வந்தார்களாமே!"

"அப்படித்தான் சொல்கிறார்கள்!"

"முன்னாள் தமிழக முதல்வர் ஒருவர்தாம் இந்த நிலையை இந்தியத் தலைமை அமைச்சரிடம் எடுத்துக் கூறித் தமிழர் ஒருவர் அப்பதவிக்கு வர வழி செய்தாராமே!"

"அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன் !"

"அவர் ஓய்வு பெற்றதும், மீண்டும் பழைய நிலையே தொடர்வது அந்தப் பலசரக்குக் காரருக்குத் தெரியாமலா இருக்கும்?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில்வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனியிதழ் :	1.25	3 00	3.00
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	18 ,,
வாழ்நாள்கட்டணம் :	200 ,,	—	—

உ.த.மு.க உறவுமடல்

தொழில் முதலாளியுடன் . . .

தோழமை உள்ளவர்களே,

மார்ச்சு'84 மேலவைத் தேர்தல். இதில் சேம்சு பிரடெரிக்கு என்பவர் போட்டியிட்டார். அவர் பற்றிய அறிமுகம் விளம்பரத்தால் விரைந்து பரவியது. ஒரு தொழில் முதலாளி அவர்! சிறிய, பெரிய தொழில் நிறுவனங்கள இன்று பல குறுக்க (ஏக்கர்) பரப்பு நிலங்களில் அமைகின்றன. அதனால் அதன் உரிமையாளர்கள் நிலமுதலாளிகளாயும் உள்ளார்கள். சேம்சு பிரடெரிக்கும் அப்படிப்பட்ட முதலாளியாதல் கூடும். அவரைப் பற்றிய ஆய்வில் விரிவாக ஈடுபடுதல் நம் நோக்கமன்று! ஆயினும், தமிழ்நாட்டின் தேசிய வளர்ச்சிக்கு இத்தகையவா சிந்தனை எப்படியுள்ளதென நேரிலபெற்ற அறிவினை உங்களோடு திறனறிய முடல்கின்றேன். அவ்வளவே!

வல்லரசுகளின் முதலாளிய முகவர்கள், பன்னாட்டு முதலாளியம், பாரதப் பெருமுதலாளிகள், தமிழநாட்டு முதலாளிகள் பற்றிய நம் அறிதிறன் போதுமானதாக இல்லை.

சேம்சு பிரடெரிக்கின் 'இரண்டு அறிமுகக் கூட்டங்களில்' பெற்ற செய்திகளைப் பார்ப்போம்.

ஆங்கிலப் பேச்சின் மூலம் படிப்பாளிகளிடம் தொடர்பு கொண்டபோது, 'தமிழ் அறிந்தவர் தமிழே பேசுக' என்ற எதிர்ப்பினை ஏற்றுக் கொண்டவர்.

கிழக்கு முகவையின் நீண்ட கடற்கரையின் மீன்வளம் பெறவும், கடற்கரையோரப் போக்குவரத்தினைப் பயன்படுத்தவும், சுண்ணாம்புப் படிவங்களைக் கொண்டு தொழில் நிறுவனப் படுத்தவும் வேண்டுமெனக் கூறினார்.

கல்வி வேலைவாய்ப்பைத் தரவல்லதாக இருத்தல் வேண்டும் என்பதில் உடன்பட்டார்.

மண்டபத்தில் தங்கியுள்ள 'இலங்கை மக்கள்' நலம் பற்றி ஆராயவும், அவர்களுக்கு உதவவும் தமக்குள்ள ஆர்வத்தைப புலப்படுத்தினர்.

தமிழ்நிலத்தின் மீதும், தமிழர் நலத்தின் பாலும் ஆர்வம் காட்டும் இத் தமிழ்நாட்டுத் தொழில் முதலாளியின் சிந்தனையை ஆராய்ந்து, ஒரு பொது முடிவிற்கு வரலாம்!

அதன்படி, பாரதப் பேரரசில், தமிழ் நாட்டு முதலாளியின் தொழில் வளர்ச்சி அரசின் சார்பினால் மட்டும் கூடுவதில்லை. மக்களின் ஆதரவு, ஆற்றலின்றித் தொழில் வளர்ச்சியைத் தன்னுரிமையோடு பெறுதல் இயலாது என்பதும் தெளிவு!

மக்களின் துணையாற்றலை நாடி இறங்கி வரும் கட்டாயம் தமிழ்நாட்டு முதலாளிகளுக்குள்ளது. இதனையே, சேம்சு பிரடெரிக்கின் 'மேலவைத் தேர்தலில்' ஈடுபட்டதன் விளைவு எனலாம்

கட்சிகளின் ஆளுமைப் போட்டியின் கூடவே, கட்சி சார்பற்ற போட்டியும் தோன்றி வருவது, அரசியல் மலட்டுத் தனத்தை உடைக்கும்! இந்த உண்மையை உணர்ந்து ஒரு சரியான 'தமிழின' மக்களின் வளர்ச்சிக்குத் தோள்தரும பணியில் தொடர்க!

— பறம்பை அறிவன்.

நீலமலை முள்ளுக்குறும்பர்!

கடந்த மேழம்-7 அன்று இரவு 8 00 மணிக்கு, கோவை வானொலி நிலையம் ஒலிபரப்பிய நேருரைச் செய்தி ஒன்று:

அச்செய்தி, நீலகிரி மலைச்சரிவில் வாழ்ந்து கொண்டிருக்கும் (பழமபண்பாட்டுடன்) "முள்ளுக் குறும்பர்" என்ற ஓர் இனத்தாரிடம் நேருரை கண்டதில் அவாகள் இறை(கடவுள்) வழிபாட்டில் உருவ வழிபாடு கிடையாது என்று தெரிவித்துள்ளார்கள். நேருரை கண்டவாகள ஏன் காளி, மாரி போன்ற தெய்வங்களை வழிபடலாமே என உசாவியதற்கு அவர்கள் அளித்தவிடை, "எங்கள் முன்னோர் காலத்திலிருந்தே அந்தமாதிரி வழிபாடு இல்லை" எனக் கூறிவிட்டனர். அவர்களின் தொழில் வேட்டையாடுதல்.

மொழி :- தமிழும் மலையாளமும் கலந்தது.

படித்தவர்கள் :- ஒரே ஒரு மாணவிமட்டும் கல்லூரிக்குச் சென்று கொண்டுள்ளாள். ஒருவர் மட்டும் புகுமுக வகுப்பு முடித்திருக்கின்றார்.

திருமணமுறை :- கேரளத்தில் பெண் எடுத்துக் கொண்டு-பெண் கொடுப்பது-பெண்கள் கணவரை இழந்தால், மறுமணம் கண்டிப்பாகச் செய்து கொள்வது இவர்கள் பழக்கம்.

இளைஞர்கள் ஒன்றிணைந்து 'முள்ளுக் குறும்பர் இளைஞர் நற்பணிமன்றம்" தொடங்கியுள்ளனர். அதன் மூலம் அவ்வினத்தாரைத் திருத்தப் போகின்றார்களாம் — என்ன செய்வார்களோ?

கூறுகூறாய்ப் பிரிந்திருப்பதால் தொல்லையே!

அவலூர்ப்பேட்டையில் உ.த.மு.க. நடத்திய பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் பெருவிழா நிகழ்ச்சி !

28-4-84 காரி (சனி) மாலை நகரெங்கும் மின் தடை மற்றும் பெருங்காற்றும் சிறு மழையும் நிறைந்திருந்ததனால் பாவேந்தர் பிறந்தநாள் விழா குறிப்பிட்டது போல் அன்றி காலத்தாழ்த்தமாக அன்று மாலை 7-00 மணிக்கு, அவலூர்ப்பேட்டை உ.த.மு.க. கிளையின் தலைவர், உயர்மிகு மருத்துவர் கோ. சரவணன் அவர்கள் தலைமையில் தொடங்கியது. செஞ்சி வட்டச் செயலாளர் தா. நெஞ்சிற்கினியன் அனைவரையும் வரவேற்றார். காவல்துறை துணை ஆய்வாளர் உயர்மிகு ஏ. கே. சீனிவாசன முன்னிலை ஏற்றுப் பாவேந்தரின் வீரமூட்டும், எழுச்சிமிகு பாடல்களில் மேற்கோள் காட்டியதுடன் குழந்தைகட்கு மனத்தில் பதியுமாறு இசைக் கற்பிக்கச் செய்தல் வேண்டுமெனவும் வற்புறுத்தினார். உ.த.மு.க.வின் இதுபோன்ற சீரிய தொண்டுகளையும் மிகவும் பாராட்டினார்.

அவலூர்ப்பேட்டை சிற்றூர் முன்னேற்ற இளைஞர் கழகத் தலைவர் உயர்மிகு ஐ. ஓரபன் குமார அவர்கள் பேசும்போது உ.த.மு.க.வின் தொண்டு ஊரிலுள்ள மக்கள் அனைவர்க்கும் மிகவும் பயனளித்துள்ளது. நீண்டகாலமாகவே எரியாது இருந்த தெரு மின் விளக்குகளை, பலகட்ட போராட்டங்களின் மூலம், இந்த ஊரிலுள்ள எங்களைப் போன்ற எத்தனையோ கழகங்கள் முயன்றும் பயனில்லாத நிலையில் பெரும் வெற்றி பெற்றதோடு, ஊருக்கு விளக்கேற்றி இருக்கின்றார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் மூலமும் தமிழ் இன உணர்வை ஊட்டி வருகின்றார்கள். இதுபோன்ற பயனுள்ள செயல் வேறு எந்த கழகமும் செய்யவில்லை என்பது வெள்ளிடை மலை. ஊருக்கு மிகவும் பாடுபடும் திரு. நெஞ்சிற்கினியன், மருத்துவர் சரவணனார் திரு. இராமலிங்கனார் முதலியோரையும் எங்கள் கழகத்தின் சார்பாகப் பாராட்டுகின்றோம்.'' என்றார். மேலும் பல நன்மைகளைச் செய்ய வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். அதற்கு அவரின் ஊர் முன்னேற்ற இளைஞர் கழகம் முழு ஒத்துழைப்பையும் நல்கும் என்றும் உறுதி கூறினார். பாவேந்தரின் பாடல்களின் நலத்தையும் ஆங்காங்கே படம் பிடித்துக் காட்டினார்.

ஆரணி வட்ட உ.த.மு.க. செயல்வீரர் இராம. பாண்டுரங்கனார் பேசும்போது பாவேந்தரின் பாடல்களின் எழுச்சிக்கு வேறு எந்தப் புலவரின் பாடலும் இணையாக இருக்க முடியாது. ஆளுமைதான் தமிழினத்தின் தலையாய சிறப்புமிகு புகழை மங்கச் செய்துக் கொண்டு வருகின்றது பாவேந்தர் பல்கலைக் கழகத்திலேயே பாவேந்தரின் தமிழியக்கத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமை வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. இதுபோன்ற இழிசெயல்கள் செய்யப்படும் போதெல்லாம் நாம் விழிப்புடன் இருந்து கண்டித்துத் தமிழினம் உய்ய வழிகாணவேண்டுமெனக் கவலை ததும்ப வேண்டிக்கொண்டார்.

திருவண்ணாமலை மாவட்டச் செயலர் உயர்திரு உலக முதல்வன், விழுப்புரம் மாவட்டச் செயலாளர் உயர்மிகு விழுப்பரையன், விழுப்புரம் மாவட்டப் பொருளாளர் திருமிகு நக்கீரன் ஆகியோர் பல சிறந்த கருத்துகளை எடுத்துக் கூறினர்.

துணைப்பதிவாளராக பதவிஉயர்வு பெற்றதிருமிகு சு. கந்தசாமியைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி உயர்மிகு இரா. செழியன் (பொருளாளர் அவலூர்ப்பேட்டை உ.த.மு.க.) அவர்கள் பேசும்போது, என் பெயர் கேசவன் என்றும், ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனாரை அவலூர்ப்பேட்டையில்சந்தித்தது முதல் என் பெயரைச் செழியன் என்று மாற்றிக் கொண்டேன். இப்படிப்பட்ட தமிழ் இன உணர்வை ஐயாவும் அவர் காட்டிய பாதையில் இன்று உ.த.மு.க.வும் தான் செயலாற்றி வருகின்றது. மற்றவையெல்லாம் போலி வாழ்க்கை நடத்துகின்றன என்று பாவேந்தரின் பாடல்களின் மேற்கோளுடன் விளக்கினார்.

ஏற்புரை ஆற்றிய உயர்மிகு சு. கந்தசாமி அவர்களும் இப்படிப்பட்ட தமிழினத் தமிழன் பதிக்கின்ற இனமான உணர்வை மிகவும் பாராட்டுவதாயும் அதற்கென உ.த.மு.க.வை நன்றியுடன் போற்றுவதாயும் கூறினார்.

இறுதியாக சிறப்புரை ஆற்றிய பெருந்தகை புலவர் நா. நல்லியகோடன் அவர்கள், தமிழினத்தின் விடிவெள்ளியாக, பகுத்தறிவு பகலவனின் மறுபதிப்பாக, அடிமைத்தனத்திலிருந்து தமிழினத்தை மீட்க உ.த.மு.க. ஆற்றும் பணியினைப் பலரும் பாராட்டக் கேட்டோம் என்று கூறித் தமிழருக்குத இலங்கையில் இழைக்கப்படும் கொடுமையையும் சாடினார்

இறுதியாக உ.த.மு.க. உறுப்பினர் பெரியவர். உயர்மிகு இரா. கணபதி ஐயா அவர்கள் நன்றி கூற இனிதே முடிவடைந்தது. அப்போது நேரம் இரவு 11-30 ஆகிவிடவே அடுத்து நடப்பதாக இருந்த பட்டிமன்றத்தைத் தள்ளிவைத்துக் கூட்டம் முடிக்கப்பட்டது என்பதாக அவலூர்ப்பேட்டை உ.த.மு.க. செயலாளர் திரு தா. நெஞ்சிற்கினியன் தெரிவிக்கிறார்.

கரவான எண்ணம் காற்றில் மிதக்கிறது! கண்டு கொள்வீர்!

ஆந்திர முதல்வர் என்.டி. இராமாராவ் தெலுங்கு இந்தி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளாராம்!

அண்மையில் தலைமை அமைச்சர் இந்திரா ஆந்திரா வந்தபோது, கலந்து கொண்ட விழாவில் மும்மொழிகளிலும் தமக்கிருந்த திறத்தை வெளிப்படுத்தினாராம் இராமாராவ்.

அவரின் ஆற்றலை மெச்சிய அம்மையார் அருளிய பொன்மொழிகளில் ஒன்று.

'ஆந்திர முதல்வரின் மும்மொழிக் கொள்கையை மற்ற மாநிலத்து முதல்வர்களும் பின்பற்ற வேண்டும்'

'இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரையில்' ஆங்கிலமே இணை ஆட்சிமொழியாக நீடிக்கும் என்ற பார்ப்பனத் தளபதி நேருவின் உறுதிமொழியைச் சட்டத்தில் ஏற்கச் சொல்லும் தமிழகத்துத் தலைவர்கள் 'காலம் கடந்தாகிலும் இந்தியை நீங்கள் விரும்பியே ஆகவேண்டும்' என்ற அவரின (நேருவின்) இரண்டாம் முகத்தை அறிந்து தெளியவில்லையாயினும், இப்போதேனும் அவர் 'வழித்தோன்றல்' அம்மையாரின் அருள்வாக்கு !) உணர்ந்து,

''இந்தியாவோடு இணைந்திருக்கும்வரை இந்தியை ஒழிப்பது இயலாதது'' என்பதைத் தெளிவாக்கிக் கொள்ளவேண்டும்.

— தமிழ்வென்றி, தாராபுரம்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்பு

இடம் : அணைப்பட்டி, நிலக்கோட்டை,(வட்) மதுரை மாவட்டம்

வரவு செலவு விளக்கம்

வரவு	உரூ. காசு
1. பயிற்சியாளர் கட்டண வரவு	2775 - 00
2. நன்கொடை வரவு	1827 - 00
3. தெருத்தண்டல் வழி	387 - 25
4. தலைமையக உதவித் தொகை	1000 - 00
5. பார்வையாளர் கட்டணம்	42 - 00
6. பார்வையாளர் உணவுக் கட்டணம்	86 - 00
7. சில்லரை வரவு	2 - 00
8. திருப்பித் தர வேண்டிய கடன் வரவு	872 - 45
மொத்தம்	6991 - 70

செலவு	உரூ காசு
1. தளவாடச்செலவு (ஒலிபெருக்கிக் கருவிகள் நிலையாக வாங்கியது)	2335 - 00
2. போக்குவரத்து	407 - 15
3. தங்குமனைச் செலவு	250 - 00
4. அஞ்சல்	18 - 30
5. அச்சுவகைச் செலவு	157 - 00
6. கூட்டவகைச் செலவு	269 - 95
7. உணவு வகைச்செலவு	3299 - 30
8. பிற சில்லரைப் பொருள்கள் (மின்கம்பி, நாடா இணைப்பு முதலியன)	230 - 00
9. நன்கொடை கொடுத்தது (இலங்கைக்காரர் ஒருவருக்கு)	25 - 00
மொத்தம்	6991 - 70

மா. பொழிலன்
செ. வ புகழேந்தி
பொருளாளர்கள்

தென்னவன்கோ
துணைப்பொதுச்செயலர்

பெருஞ்சித்திரனார்
கழகமுதல்வா

அணைப்பட்டியில் நடந்த உ.த.மு.க. பயிற்சி வகுப்புத்தொடரின் முழுச் செய்தி விளக்கமும் அடுத்த இதழில் வரும்!

1-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

வெள்ளைய அதிகாரிகள் தீர்த்துக் கட்ட முயன்றதாகக் கூற முடியாது. விடுதலை வரலாற்றின் இயங்கியல்களை விளங்கிக் கொண்டவர்கள், எப்பொழுதுமே போராட்டத் தலைமைகளைச் சட்டத்தால் கட்டுப்படுத்தத்தான் பார்ப்பார்களே தவிர, துமுக்கியால் சுட்டுத் தள்ளிவிட மாட்டார்கள். ஒரு தலைமையைக் காப்பது, பல்லாயிரக் கணக்கான மக்களைக் காப்பதற்குச் சமம்.

தேசிய இன எழுச்சிகளுக்கான விடை இப்படித்தான் இருக்கும் என்பது ஆளுகின்ற அதிகார வெறியர்களின் முடிவாக இருக்குமானால், தேசியப் புரட்சி மறவர்கள், தங்கள் போராட்டப் பாதைகளை மாற்றியமைத்துக் கொள்ளவே வேண்டியிருக்கும் என்று எவரும் எளிதில் கருத்துச் சொல்லிவிடலாம். 0

4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

ஒரு சிறு முரண்பாட்டையும் விட்டுவிடாமல் கணிப்பது' ஒன்றுபட்ட நோக்கினை வளர்ப்பது, இணைந்து போராடுவது என்றெல்லாம் பலபடப் பேசினாலும் 'தேசிய இன ஒன்றுபட்ட இயக்கம் பற்றியும் சிந்தித்தல் வேண்டும்; செயல்படுதல் வேண்டும். இதற்கான புறநிலை உண்மையிலிருந்து, செயல்பட அடிப்படை அமைப்பு முன் வருதல் வேண்டும்! 0

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண் : TN/MS(C)/657

அனுப்புதல்: பெறுநர்.
தமிழ் நிலம் தாள்-அஞ்சல்
5. அருணாசலத் தெரு, திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி,
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரூ. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரூ. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர் : தென்மொழி அச்சகம். 5, அருணாசலத் தெரு, சென்னை-5.